RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar MBBS MS DNB MCH (vascular) 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari MS (Opthal) DO MBA 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar MBBS MS FMAS 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R MBBS MS MCH (vascular) 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R MBBS MD 87780 87742 — General Physician
Dr Praveena E MBBS MS (ENT) 9944 100443 — Sr ENT Surgeon

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சி மாநாடு, கண்காட்சியைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

சென்னை – 3 நவம்பர், 2026 பிரதமர் நரேந்திர மோடி, பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சி மாநாடு, கண்காட்சியை புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று தொடங்கி வைத்தார். மாநாட்டில் உரையாற்றிய அவர், உலக அளவில், கொவிட் -19 பெருந்தொற்று முதல் தற்போது மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி வரை, முன்னெப்போதும் இல்லாத பல்வேறு தடைகளை எதிர்கொண்டு வருவதை குறிப்பிட்ட பிரதமர், இத்தகைய இக்கட்டான சூழலிலும், இந்தியா பொருளாதார வளர்ச்சியை சீரான முறையில் பராமரித்து வரும் விதம் குறித்து, 140 கோடி மக்களும் பெருமிதம் கொள்வதாக கூறினார்.

உலக அளவில் எரிசக்தி நெருக்கடிகளால் சூழப்பட்ட ஒரு முக்கியமான காலகட்டத்தில் இந்த உச்சி மாநாடு நடைபெறுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய சூழல், அன்றாட வாழ்க்கை, நாட்டின் முன்னேற்றத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை உணர்த்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் ஒன்பதாவது கூட்டமும், பசுமை ஹைட்ரஜன் குறித்த நான்காவது மாநாடும், இந்த மாநாட்டுடன் இணைந்து நடைபெறுவதால், இந்த நிகழ்வு மிகவும் விரிவான பரிமாணத்தைக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.